# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2106/9 - 2019 ජනවාරි මස 16 වැනි බදාදා - 2019.01.16

*2106/9 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 43(1) ஆம் உறுப்புரை மற்றும் 46(1) (ஆ) ஆம் உறுப்புரையின் வண்ணம், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால், 2018, திசெம்பர் மாதம் 28 ஆந் திகதிய 2103/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு, 2019.01.10 ஆந் திகதிய 2105/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் திருத்தப்பட்ட அறிவித்தலானது, 2019, சனவரி மாதம் 11 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு மேலும் திருத்தப்படுகின்றது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

**மைத்திரிபால சிறிசேன,**
*சனாதிபதி.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 01,*
*2019, சனவரி 14.*

**அட்டவணை**

*(1)* அவ்வறிவித்தலில் "பாதுகாப்பு அமைச்சர்" (இல.1) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 18 ஆவது விடயத்தை நீக்குவதன் மூலம்;

(ஆ) அதன் நிரல் II இல் 4 ஆவது விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன்மூலம்;

5. இலங்கை பொலிஸ்

(இ) அதன் நிரல் II இல் 5 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(ஈ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள "தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைச் சட்டம் (1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க)" எனும் விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன்மூலம்;

- (2011 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க) தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனச் சட்டம்

(2) அவ்வறிவித்தலில் "தேசியக் கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழில் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சர்"

(இல.3) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் நிரல் I இல் காட்டப்பட்டுள்ள 25 ஆவது விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயங்களை சேர்ப்பதன் மூலம் ;

26. பிரதேச கைத்தொழில்களை மேம்படுத்துதல் உட்பட பிரதேச பொருளாதாரத்தினை வலுவூட்டுவதற்காக பொருத்தமான பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல்.

27. நுவரெலியா , கண்டி, மாத்தளை, பதுளை, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் விசேட அபிவிருத்தி கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

(ஆ) அதன் நிரல் I இல் 26 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்;

(இ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள இரண்டாம் விடயத்தை நீக்குவதன் மூலம்;

(ஈ) அதன் நிரல் II இல் 5 ஆவது விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயங்களை சேர்ப்பதன் மூலம் ;

6. ஆட்கள், சொத்துக்கள் மற்றும் கைத்தொழில்கள் புனரமைப்பு அதிகார சபை

(உ) அதன் நிரல் II இல் 3 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்;

(ஊ) அதன் நிரல் III இல் காட்டப்படுகின்ற "நட்டஈட்டுக்கான அலுவலகச் சட்டத்திற்குப் (2018 ஆம் ஆண்டில் 34 ஆம் இலக்க)" பின்னர் பின்வரும் விடயத்தை சேர்ப்பதன் மூலம்;

- ஆட்கள், சொத்துக்கள் மற்றும் கைத்தொழில்கள் புனரமைப்பு அதிகாரசபைச் சட்டம் (1987 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க)

(எ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள பின்வரும் விடயங்களை நீக்குவதன் மூலம்;

- (1950 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க) குடிசன மதிப்பீட்டுச் சட்டம்

(3) அவ்வறிவித்தலில் "நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் (இல.6)" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் நிரல் II இல் 14 ஆவது விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;

15. கொம்ப்றோலர் ஜெனரால் அலுவலகம்
16. நலன்புரி நன்மைகள் சபை

(ஆ) அதன் நிரல் II இல் 15 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்;

(4) அவ்வறிவித்தலில் "அரச தொழில்முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர்" (இல.7) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் நிரல் I இல் 11 ஆவது விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன்மூலம்;

12. மலைநாட்டு மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கான நியதிச்சட்ட சபையைத் தாபித்தலும் அதற்குரிய அலுவல்களும்

(ஆ) அதன் நிரல் I இல் 12 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்;

(5) அவ்வறிவித்தலில் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் (இல.10) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு

(அ) அதன் நிரல் I இல் காட்டப்பட்டுள்ள 32 ஆவது விடயத்தை நீக்குவதன் மூலம்;

(ஆ) அதன் நிரல் I இல் 33 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்;

(இ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள பின்வரும் விடயத்தை நீக்குவதன் மூலம்;

- (2018 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) 1990 சுவசரிய மன்றச் சட்டம்

(6) அவ்வறிவித்தலில் "பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்"(இல.15) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 7 ஆவது விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயத்தை சேர்ப்பதன் மூலம்;

8. கப்ருக நிதியம்

(ஆ) அதன் நிரல் II இல் 8 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்;

(இ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள (1981 ஆம் ஆண்டின் 75 ஆம் இலக்க) கரும்பு ஆராய்ச்சி நிறுவகச் சட்டம் எனும் விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம்;

- (2005 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) கப்ருக நிதியச் சட்டம்

(7) அவ்வறிவித்தலில் பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் (இல.18) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 11 ஆவது விடயத்தை நீக்குவதன் மூலம்;

(8) அவ்வறிவித்தலில் "கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடைவளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்" (இல.16) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 5,16,17 ஆகிய விடயங்களை நீக்குவதன் மூலம்;

(ஆ) அதன் நிரல் II இல் 32 ஆவது விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம்;33. காலநிலை பாதகவிளைவுகளைக் குறைத்தல் கருத்திட்டம்

(இ) அதன் நிரல் II இல் 6ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்;

(9) அவ்வறிவித்தலில் "துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர்" (இல.27) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் நிரல் I இல் காட்டப்பட்டுள்ள 13 ஆவது விடயத்தை நீக்குவதன் மூலம்;

(ஆ) அதன் நிரல் I இல் 10 ஆவது விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;

11. கப்பல் உரிமைத்துவம் மற்றும் நடவடிக்கைகள், கப்பல் முகாமை, கப்பல் தரகுச் செயற்பாடு மற்றும் முகவராண்மைச் சேவைகள்

12. சுங்க முகவராண்மைகள் மற்றும் முழுமொத்தக் கப்பற் பண்டங்கள் போக்குவரத்துக்கான தீர்ப்புகள்

13. உறுகுணை பொருளாதார அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தைத் தாபித்தலும் அதற்குரிய நடவடிக்கைகளும்

(இ) அதன் நிரல் I இல் 11ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்;

(10) அவ்வறிவித்தலில் "தொழில், தொழில்சங்க உறவுகள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சர் (இல.30)" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு;

(அ) அதன் இலக்கம் (30) ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல்கள் அமைச்சராக;

(ஆ) அதன் நிரல் I இல் 1 தொடக்கம் 12 வரையிலான விடயங்கள் மற்றும் 18, 19 மற்றும் 20 ஆம் விடயங்களை நீக்குவதன் மூலம்;

(இ) அதன் நிரல் I உடன் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன் மூலம்;

1. ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல்கள் விடயம் மற்றும் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள திணைக் களங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வகுத்தமைத்தலும் தொடராய்வு செய்தலும், மதிப்பிடுதலும்

2. பெறுமதி சேர்த்தல், ஏற்றுமதி சந்தை வாய்ப்புக்களை ஊக்குவித்தல், கைத்தொழில்களின் பாதுகாப்பை ஏற்படுத்தி விவசாயிகள், மீனவர்கள் மற்றும் சிறியளவிலான கமத்தொழில் முயற்சியாளர்களை உலகப் பொருளாதாரத்தின் மீது ஈடுபடுத்துவதற்கான கொள்கைகள் மற்றும் உபாய வழிகளை வகுத்தமைத்தல்

3. பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் அடங்கலாக நிலைபேறான வளங்களின் பயன்பாடு மற்றும் உயிரின பாதுகாப்பு ஊக்குவிப்புக்குத் தேவையான கொள்கைகளைச் செயற்படுத்தல்

4. கமத்தொழில் அபிவிருத்தி வலயங்கள் மற்றும் கடற்றொழில் ஏற்றுமதி அபிவிருத்தி வலயங்கள் தொடர்பான நடவடிக்கைகள்

5. குறிப்பாக கிழக்கு மாகாணத்தினுள் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் சமுதாயத்தின் சமூக, பொருளாதார தரத்தை உயர்த்துவதற்குரிய நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைச் செயற்படுத்தல்

6. புவியியல் வளங்களின் நிலைபேறான பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்றிட்டங்களைச் செயற்படுத்தல்

(ஈ) அதன் 13 ஆம் விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்;

(உ) அதன் நிரல் II இல் 1 முதல் 09 வரையிலான விடயங்களை நீக்குவதன் மூலம்;

(ஊ) அதன் நிரல் II உடன் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன் மூலம் ;

1. ஏற்றுமதி கமத்தொழில் திணைக்களம்

2. சரக்குப் பொருட்கள் மற்றும் அதுசார்ந்த உற்பத்திகள் சந்தைப்படுத்தும் சபை

(எ) அதன் நிரல் II இல் 10 ஆம் விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன் மூலம் ;

(ஏ) அதன் நிரல் III இல் பின்வரும் விடயங்களை நீக்குவதன் மூலம்;

- ஊழியர் சபைச்சட்டம் (1979 இல. 32)
- ஊழியர் சேமலாப நிதிச்சட்டம் (1958 இல. 15)
- பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை சேவையிலீடுபடுத்தல் சட்டம் (1956 இல. 47)
- கைத்தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டம் (1942 இல. 45)
- தொழில்நுட்ப பிணக்குகள் சட்டம் (1950 இல. 43)
- மகப்பேற்று உதவிகள் கட்டளைச்சட்டம் (1939 இல. 32)
- தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய நிறுவனச்சட்டம் (2009 இல. 38)
- பணிக்கொடை கொடுப்பனவுச்சட்டம் (1983 இல. 12)
- கடைகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் பற்றிய சேவை மற்றும் சம்பளங்களை விதிமுறைப்படுத்தும் சட்டம் (1954 இல. 19)
- சிரமவாசனா நிதியச்சட்டம் (1998 இல. 12)
- தொழிலாளிகளின் தொழில்களை முடிவுறுத்தல் (விசேட ஏற்பாட்டு) சட்டம் (1971 இல. 45)
- தொழிற்சங்க கட்டளைச்சட்டம் (1935 இல. 14)
- வேதனங்கள் சபை கட்டளைச் சட்டம் (1941 இல. 27)
- தொழிலாளர் நஷ்டஈட்டுக் கட்டளைச் சட்டம் (1934 இல. 19)
- கட்டணங்கள் அறவிடுதல் தொழில் முகவராண்மைகள் சட்டம் (1956 இல. 37)
- ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (1993 இல. 19)
- ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சட்டம் ( 1980 இல. 46)

(ஐ) அதன் நிரல் III இல் "தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனச்சட்டம்"(1992 இல. 41) " என்பதற்கு முன் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம் ;

- ஏற்றுமதி கமத்தொழில் அபிவிருத்திச் சட்டம் (1992 இல. 46)

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.